**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 240 /2019**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.02.2024 | தந்தை/கணவர் பெயர்: | ராமசந்திரன் |
| பெயர்: | ரவிச்சந்திரன் (PW-1 Chief ) | வயது : | 39/2024 |
| கிராமம்: | மாதானம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

<u>**முதல் விசாரணை : 12.02.2024.**</u>

நான் இவ்வழக்கின் 2–ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் இதர வாதிகளுக்காகவும் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

08.10.1956 தேதியிட்ட பட்டம்மாளுக்கு சீத்தாபாய் வகையறா எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 08.10.1956 தேதியிட்ட மதுராம்பாளுக்கு சீத்தாபாய் வகையறா எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்திற்கு நான் செலுத்திய கிஸ்து ரசீதுகளை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எண்ணிக்கை–5)** தாவா சொத்திலுள்ள மின் மோட்டாருக்கு

எனது பெரியப்பா சண்முகம் பெயரிலுள்ள மின் கட்டண அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.